<u>எதிரி ஆஜர், எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.</u>

அசா. 1 செல்வி பிரியதர்ஷனி க/பெ அழகிரி என்பவரின் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

1. எதிரி என்னிடம் வாங்கி கடனை திருப்பி தராததால் நான் இந்த வழக்கை போட்டுள்ளேன். எத்தனை ஆண்டுகளாக வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்துவருகிறேன் என்றால் நான் அப்படி தொழில் செய்யவில்லை. எதிரி ரூபாய் 10,00,000 /– க்கு கடனுறுதி சீட்டு எழுதி கொடுத்துள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கடனுறுதி சீட்டை 20.09.2019 அன்று எதிரி எழுதி கொடுத்தார். எதிரி பெற்ற கடன் தொகைக்கு எனக்கு மாதமாதம் வட்டி கொடுத்தார் என்றால் சரியல்ல.
2. இவ்வழக்கை கடந்த மே மாதம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். தேதி சரியாக ஞாபகமில்லை. எதிரி பெற்ற கடனுக்கு 5 காசோலைகளை செக்யூரிட்டியாக கொடுத்தார்என்றால் சரியல்ல. எதிரி எனக்கு 14.02.2022 அன்று காசோலை வழங்கினார். 21.02.2022 அன்று மேற்படி காசோலையை பணமாக்க எனது வங்கியில் செலுத்தினேன். கடனுறுதி சீட்டு எழுதி கொடுத்த பிறகு தனக்கு லோன் வருவதாகவும், அந்த தேதியில் காசோலையை பணமாக்க செலுத்தும்படியும் எதிரி கூறி காசோலை வழங்கினார். மேற்படி கடனுறுதி சீட்டை நான் வழக்கிற்காக உருவாக்கி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கடனுறுதி சீட்டில் உள்ள கையெழுத்து எதிரியினுடையது இல்லை என்றாலும் அவர் நீதிமன்றத்தில் தன்னிடம் வழக்கு சாராம்சம் குறித்து வினவியபோது அளித்த பதிலை பதிவு செய்த தாளில் உள்ள கையெழுத்து கடனுறுதி சீட்டில் உள்ள கையெழுத்துடன் வேறுபட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் வருமான வரி செலுத்துகிறேனா என்றால் சிஎம்சி மருத்துவமனையில் பணிபுரிவதால் வருமானவரி பிடித்தம் செய்யப்படும்.
3. மேற்படி 10,00,000 /– எதன் மூலம் எனக்கு கிடைக்கப்பெற்றது என்றால் எனது கணவர் 2014 ஆம் ஆண்டு இறந்தபோது வந்த காப்பீட்டு தொகையும், எனது சேமிப்பையும் சேர்த்து கடனாக கொடுத்தேன். பணத்தை ரொக்கமாக நான் வீட்டில் வைத்திருந்தேன். மேற்படி பணத்திற்கு நான் வருமான வரி கட்டவில்லை என்றால் காப்பீட்டு தொகை பெறும்போதே வரி பிடித்தம் செய்துதான் பணத்தை பெற்றேன். மேற்படி விவரங்களை நான் எனது சட்ட அறிவிப்பிலோ புகார் மனுவிலோ தெரிவிக்கவில்லை. இந்திய ரிசர்வ் வங்கியின் உத்தரவு படி ஒரு தனிநபர் ரூ. 2,00,000 மட்டுமே ரொக்கமாக வைத்துக்கொள்ளவேண்டும் என்ற விவரம் தெரியும். அது எப்போதிலிருந்து நடைமுறையில் இருந்து வருகிறது என்ற விவரம் எனக்கு தெரியாது. மேற்படி விவரம் 6 மாதங்களுக்கு முன்புதான் தெரியும்.
4. 2014 ஆம் ஆண்டு எதிரி என்னிடம் கடனாக பெற்ற ரூ.3,00,000 பணத்தை திருப்பி கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக கடனுறுதி சீட்டை தயார் செய்து இந்த வழக்கை எதிரி மீது பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் காசோலையை 21.02.2022 அன்று வங்கியில் செலுத்தினேன். அது மறுநாள் 22.02.2022 அன்று திரும்பியது. அதன்பிறகு 09.03.2022 அன்று எதிரிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டது. பிறகு எதிரி கேட்டுக்கொண்டதால் மீண்டும் 16.03.2022 அன்று வங்கியில் செலுத்தினேன். எதிரி அவரது வங்கியில் காசோலை பணமாகாதபடி Stok payment கொடுத்துள்ளார். நான் இருமுறை காசோலையை வங்கியில் செலுத்தினேன். இருமுறையும் மதிப்பு மறுக்கப்பட்டு திருப்பப்பட்டது.
5. எதிரியின் வங்கி கணக்கானது அவருடைய சம்பள கணக்கு என்பதால் காசோலை திரும்புவதற்கு வாய்ப்பு இல்லை என்றாலும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 2014 ஆம் வருடம் எதிரி பெற்ற கடனுக்காக அவர் இவ்வழக்கின் காசோலையை செக்யூரிட்டியாக கொடுத்தார் என்றாலும் அந்த கடனை திருப்பி கொடுத்த பின்பு அந்த காசோலையை பயன்படுத்தி இந்த வழக்கு போட்டுள்ளேன் என்றாலும் இந்த காசோலைக்கு பிறகு வரிசை எண்ணில் இருக்கும் காசோலைகள் வங்கியில் பணமாக்கப்பட்டிருக்கிறது என்றாலும் சரியல்ல. 2014 ஆம் ஆண்டு கொடுக்கபட்ட நிரப்பப்படாத காசோலையை பயன்படுத்தி இந்த வழக்கை போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. பழைய காசோலையை இவ்வழக்கை போடுவதற்காக நான் பயன்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. கடனுறுதி

சீட்டை பயன்படுத்தி சிவில் வழக்கு போட்டியிருந்தால் அதில் உள்ள கையெழுத்தை ஒப்பீடு செய்து அது போலியானது என தெரியவரும் என்ற காரணத்தினால் நான் இந்த வழக்கினை எதிரி மீது போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. கடனுறுதி சீட்டு அதனை தயாரித்தவரின் கையொப்பமோ, லட்சினையோ இல்லை என்றால் சரிதான்.

6. 2014 ஆம் ஆண்டு பெற்ற கடனை எதிரி திருப்பி கொடுத்தபின்பும் அதற்கு வரவேண்டிய வட்டி தொகைக்காக எதிரியை தொடர்ந்து பணம் கேட்டுக்கொண்டிருந்ததால் எதிரியும் அவரது சகோதரரும் சேர்ந்து எனக்கு ரூபாய் முத்திரை தாளில் எழுதி கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. நான் கந்துவட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்கிறேன் என்றாலும் அதனால் எதிரி கொடுக்க வேண்டிய வட்டி பணத்திற்கு பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் சொல்வதுபோல் எதிரி 10,00,000 பணத்தை பெற்றிருந்தால் சிவில் வழக்கு தொடுத்திருப்பேன் என்றாலும் எதிரி மீது பொய் வழக்கு போடவேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை பழைய கசோலையை பயன்படுத்தி போட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல.
7. கடனுறுதி சீட்டில் உள்ள கையெழுத்து எதிரியினுடையது இல்லை என்றாலும் நான் ரிசர்வ் வங்கியின் விதிமுறை எனக்கு தெரியும் என்றாலும் அதனை மீறி 10,00,000 த்தை ரொக்கம் வைத்திருந்தேன் என்று நான் கூறுவது தவறு என்றாலும் சரியல்ல. என்னிடம் 10,00,000 பணம் ரொக்கமான இருந்ததில்லை என்றாலும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 2014 அப்போது பெறப்பட்ட காப்பீட்டு பணத்தை 2016 ஆம் ஆண்டு பழைய ரூபாய் நோட்டுக்கள் செல்லாது என்று அறிவித்தபின்பு அந்தரொக்க பணத்தை 2014 ஆம் ஆண்டிலிருந்து வீட்டில் வைத்திருக்க முடியாது என்றாலும் வழக்கிற்காக பொய்யா சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் காப்பீட்டில் பெற்றபணத்தை 2016 ஆம் ஆண்டு எனது வீடு கட்டுவதற்காக செலவு செய்துவிட்டேன்.
8. நான் முதலில் காப்பீட்டு மூலமாக பெறப்பட்ட பணத்தை எதிரிக்கு வழங்கியதாக கூறிவிட்டு தற்போது அந்த பணத்தை வீடு கட்டுவதற்கு செலவு செய்துவிட்டதாக முன்னுக்கு பின் முரணாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல. நான் காப்பீட்டில் பெற்ற பணத்தை செலவு செய்துவிட்டு வீடு கட்டுவதற்காக வாங்கிய கடனை அடைப்பதற்காக எதிரி மீது இந்த பொய வழக்கு போட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல.

J JAYGANESH

Digitally signed by J JAYGANESH
Date: 2023.04.21 15:11:25 +0530